538

# அவை பேசினால்......

25

அ. மு. ப.

# அவை பேசிலுல்...

அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்.,
துணைத்தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-30.

தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30

உரிமைப் பதிப்பு
மார்ச்சு 1960

விற்பனை உரிமை
பாரி நிலையம்
பிராட்வே, சென்னை-1

# முன்னுரை

சென்ற செப்டம்பர் மாதம் 1956-ல் நடைபெற்ற வனவிலங்கு வாரத்தில் நம் நாட்டு முதல் அமைச்சர், பண்டித நேரு அவர்கள், "மனிதர்களைப் பற்றிப் பறவைகளும் விலங்குகளும் என்ன நினைக்கின்றன என்றும், அவைகளுக்கு மனிதனைப் போல் வெளியிடும் சக்தி இருந்தால் எவ்வாறு நம்மைப் பற்றி பேசும் மென்றும் தாம் ஆச்சரியப் படுவதுண்டு என்று கூறினார். ஆம்! மனிதனுடைய இன்றைய வாழ்க்கை நிலை பற்றிப் பறவைகளும் விலங்குகளும் பேசினால் எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும்.

மனிதன் பிற உயிர்களைக் காட்டிலும் மேலானவன் என்று தன்னைக் கூறிக்கொள்ளுகின்றான். ஒரு வகையில் அஃது உண்மையானாலும் கூட இன்னும் மனிதன் அவ்விலங்குகளிடமிருந்தும், பறவைகளிடமிருந்தும் எத்தனையோ பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியவன் ஆகின்றான். அவைகள் பல வகைகளில் மனிதனைக் காட்டிலும் சிறக்க வாழ்ந்து அவனுக்கு எத்தனையோ நல்ல நீதிகளைக் கற்றுக் கொடுக்கின்றன. மற்றவற்றிற்கு வழி காட்டியாக நல்ல வழியில் வாழ வேண்டிய மனிதன் இன்று விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கீழ்ப்பட்டும் வாழ்ந்து தன் சமுதாயத்துக்கே துன்பத்தைத் தேடிக்கொள்ளுகின்றான். இந்த நிலையில் அவ்விலங்குகளும் பறவைகளும் பேசினால் நம்மைப் பற்றி என்ன நினைக்கும் என்று கற்பனை செய்து பார்த்தல் முறைதானே.

காட்டு விலங்குகளை மனிதன் அதிகமாகக் காண்பதில்லை. அவற்றுள் சில கொடுமை வாய்ந்தவை. ஆனால் நாட்டிலே மனிதனுடைய அன்றாட

வாழ்விலே பல விலங்குகளும் பறவைகளும் கூடிக் கலந்து வாழ்கின்றன. அவைகள் பேசுவதனால் மனிதனுக்கு எத்தனையோ உண்மைகளை விளக்கும். பறவைகளும் விலங்குகளும் மட்டுமன்றி மரஞ்செடிகளும் ஊர்வனவும்கூட எத்தனையோ நீதிகளைப் புகட்டும். அந்தக் கற்பனையில்தான் இந்த நூல் உருவாகின்றது.

மனிதன் நாள்தோறும் தன் கண்முன் காணும் விலங்குகளும் பறவைகளும், பிறவும் தன்னைப் பற்றி என்ன நினைக்கின்றன என்பதை உணர்வானாயின் ஒருவாறு அவன் வாழ்க்கை நல்ல வழியில் திருந்தக் கூடும் என்ற எண்ணத்திலேயே இந்த முயற்சியை மேற்கொண்டேன்.

இந்நூலை எளிய முறையில் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் எழுதியிருக்கிறேன். கிராமங்களில் வாழும் கல்லாதவர்களும், சிறிது படிக்கக் கற்றவர்களும் சிறுவர்களும் தம்மைச் சுற்றி உயிர் வாழும் பறவைகளும் விலங்குகளும் பிறவும் தம்மைப் பற்றி என்ன நினைக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க இந்நூல் உதவி செய்யக் கூடும் என நம்புகின்றேன். இந்நூலில் எடுத்துக் காட்டுகளாக ஒரு சில வற்றைத்தான் காட்டியிருக்கின்றேன். இவ்வாறே கண்முன் காணும் ஒவ்வொரு பொருளும் மனிதனுக்கு எத்தனையோ உண்மைகளை உணர்த்திக்கொண்டுதான் வருகின்றன. அறிவு பெற்ற மக்கள் அவற்றால் தம் வாழ்வைத் திருத்திச் செம்மையுறுவார்கள் என நல்ல உணர்வோடு இந்நூலை அவர்கள் முன்வைக்கின்றேன்.

ஆசிரியன்